உ

சிவமயம்



தெல்லிப்பழை — மாவிட்டபுரம்

கொல்லங்கலட்டி

# கேணிக்கரை வீரகத்தி விநாயகர்

# திருவூஞ்சல்


பதிப்பாசிரியர் :

**பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை அவர்கள்**

(விழிசிட்டி, சேர் கனகசபை வித்தியாலய
முன்னாள் தலைமை ஆசிரியர்)



1979

குகன் அச்சகம், தெல்லிப்பழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பதிப்புரை

'ஊசல்' என்ற வார்த்தை 'ஊஞ்சல்' என வழங்குகின்றது. எமது மனம் எப்பொழுதும் ஆடிக் கொண்டே இருப்பதோர் ஊசல். அங்கும் இங்கும் அலைந்துகொண்டிருப்பதே அதன் இயல்பு. ''சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம் அரிது என்பர்'' தாயுமானுர். சிந்தை - மனம்.

ஒரு கணப்பொழுதாயினும் உலகச் சுமைகளில் இருந்து விடுபட்டுச் சும்மா இருப்பதற்குரிய ஒரே ஒரு வழி மனமாகிய ஊசலில் ஓங்கார மூர்த்தியாகிய மாவைக் கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகப் பெருமானை ஒவ்வொரு கணமும் எழுந்தருளச் செய்தலே.

இதற்கு உபகாரம் விநாயப்பெருமான் திருவூஞ் சலைத் தியானித்தலே சிறந்த வழியெனத் தெளிந்த திருமதி இராமலிங்கம் தையற்பிள்ளை அவர்கள், நவாலியூர் செந்தமிழறிஞர் திரு. க. சோமசுந்தரப்புலவர் அவர் களைக் கொண்டு திருவூஞ்சல் செய்வித்து 1943ஆம் ஆண்டு அச்சுப்பதிவு செய்வித்தார்கள்.

அன்றுதொட்டு இன்றுவரை விக்கினங்களை விலக் கும் விக்கினேஸ்வரப்பெருமானை மனமாகிய திருவூஞ் சலில் வைத்துத் தினமும் தியானித்து 1978ஆம் ஆண்டு மார்கழி மாதத் திருவெம்பாவைத் தினத்தில் சும்மா விருக்கும் சுகநிலையாகிய பேரின்பநிலையைப் பெற்ருர்.

அன்னாரின் ஞாபகமாக இந்நூல் மாவைக் கொல்லங்கலட்டி விநாயகர் தேவஸ்தான ஆதீன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்த்தா சிவஸ்ரீ சு. சிவஷண்முகானந்தக்குருக்கள் அவர்கள் அனுமதியுடன் ஷெ ஊர் விவசாயப் போதனுசிரியர் அன்புச்செல்வர் திரு. ச. த. அப்புத்துரை அவர்கள் விரும்பியவாறு இரண்டாம் பதிப்பாக வெளிவருகிறது.

மேலும் அவர் தினமும் பாராயணஞ் செய்யும் திருச்செந்தூர்ப்புராணக் காப்புச் செய்யுளும் உரையும் அநுபந்தமாக அமைக்கப்பட்டிருக்கிறது.

"குணம்நாடிக் குற்றமுந் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்."

வே. சங்கரப்பிள்ளை

---

பத்தியொடு சிவசிவா என்றுதிரு நீற்றைப்
பரிந்துகை யாலெ டுத்துப்
பாரினில் விழாதபடி அண்ணாந்து செவியொடு
பருத்தபுய மீதி ெழாழுக
நித்தமு விரல்களால் நெற்றியி லழிந்தலுற
நினைவாய்த் தரிப் பவர்க்கு
நீடுவினை யணுகாது தேகபரி சுத்தமாம்
நீங்காமல் நிமல னங்கே
சத்தியொடு நித்தம்விளை யாடுவன் முகத்திலே
தாண்டவஞ் செய்யுந் திரு
சஞ்சலம் வராதுபர கதியுதவு மிவரையே
சத்தியஞ் சிவ மென்னலாம்
மத்தினிய மேருவென வைத்தமுதி னைக்கடையும்
மான்மருக னை முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(குமரேசர் சதகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கணபதி துணை

தெல்லிப்பழை – மாவிட்டபுரம்

கொல்லங்கலட்டி

# கேணிக்கரை வீரகத்தி விநாயகர்

# திருவூஞ்சல்

இது நவாலியூர் திரு. க. சோமசுந்தரப்புலவர் பாடியது

## காப்பு

சொல்லுமறை யந்தணர்வே ளாள ராதித்
தொல்குடியும் பல்வளமுந் துதைந்தே யோங்குந்
தெல்லிநகர் மாவைகொல்லங் கலட்டிக் கேணித்
திருக்கரைவாழ் மொழ்ருத்தன் முகச் செல்வர் வுன்றன்
செல்லலழி யற்புதபுத் தமுத வின்பச்
செழுந்தமிழா லூஞ்சலிசை தெளிந்து பாடக்
கல்விதரு மோங்கார வடிவா முன்றன்
கற்பகஞ்சேர் பொற்பதங்கள் காப்ப தாமே.

## நூல்

ஒளிமருவு நாதவிந்து தூணை நாட்டி
உரைமருவு மிருமொழியும் விட்டம் பூட்டி
தெளிமருவு சிவகலைநூல் வடங்கள் மாட்டி
சிவமருவு மோங்கார பீடங் கூட்டி
மொழிமருவு மந்திரதோ ரணங்கள் நீட்டி
முதமருவ வியற்றியபொன் னூஞ்சல் மீதே
வெளிமருவு பொழிற்கொல்லங் கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரே யாடி ரூஞ்சல். 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்பயிலும் ஒண்சுடர்கள் குடைகள் தாங்க
வெளிபயிலும் வளிவேந்தர் கவரி வாங்க
தண்பயிலும் புனலரசன் பனிநீர் தூவ
தார்பயிலும் கொடிநிரைக ளமரர் காவ
எண்பயிலும் மலரயனு ராசி பேச
இனம்பயிலும் விரைமலர்கள் முனிவர் வீச
மின்பயிலும் பொழிற்கொல்லங் கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீ ரூஞ்சல். 2

ஏழாளு மிசைமுனிமா டகயாழ் மீட்ட
எழிலாளும் தொழின்முழவு நெடுமால் கூட்ட
தாளாளும் தமிழ்முனிவன் தாளம் போட
சதியாளும் பூதகண நர்த ராட
கோளாளும் பழவடியார் வீணைக ளோட
கிளியாளும் மொழிமடவார் வடந்தொட் டாட்ட
வேளாளர் பயில்கொல்லங் கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீ ரூஞ்சல். 3

திங்களணி செஞ்சடையும் செம்பொற் கொம்பும்
செம்மையணி மணிமார்பும் திருமுந் நூலும்
கொங்கலகும் கொன்றையணி குவவுத் தோளும்
குடவயிறும் விகடநடங் கொண்ட தாளும்
ஐங்கரமும் நால்வாயும் மூன்று கண்ணும்
அம்மையிடப் பாகமுமா யாகு வேறி
வெங்கலிதீர்க் குங்கொல்லங் கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீ ரூஞ்சல். 4

மந்திரநீர் பாலிளநீர் மணிநீ ராட்டி
மான்மதஞ்சந் தனம்பனிதம் மலியக் கூட்டி
சுந்தரப்பூம் பட்டுடுத்திக் கலன்கள் பூட்டித்
தூயமணி மாலைதொடை மாலை சூட்டி
கந்தநறும் புகையெடுத்து விளக்கங் காட்டிக்
கழல்பரவு மடியரிடர் கழிய வோட்டி
வெந்துயரம் வீட்டுகொல்லங் கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீ ரூஞ்சல். 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருப்புநறும் சருக்கரையும் பாலுந் தேனும்
பாசவலும் தினையிடியும் பழமும் பாகும்
கருப்புமுறி முறுக்குவடை கண்டும் சுண்டும்
கடலைபொரி மோதகமு மடையுங் காயும்
திருப்பொலிபுத் தமுதுமிளந் தெங்கின் காயும்
சீரடியர் தந்துமந் திரத்தாற் போற்ற
விருப்பொடருள் புரிகொல்லங் கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீ ரூஞ்சல். 6

சுந்தரப்பொன் முடியாடச் சுடிகை யாட
தூயசடை மதியாட நதியு மாட
வந்துமுறச் செவி யாட மகிழ்வு மாட
மாணிக்க வடமாட மதாணி யாட
முந்துகுட வயிருட முந்நூ லாட
முழுதுலகுங் களியரிட நடன மாடும்
வெந்துயரம் வீட்டுகொல்லங் கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீ ரூஞ்சல். 7

ஓதுவிந்து நாதமுற வுதித்தா யென்றும்
ஓங்கார மூலமறை விதித்தா யென்றும்
மோதகமும் கோடுமணிக் கையா வென்றும்
மூவிதமங் கலஞான மெய்யா வென்றும்
வேதபரி புரகமல பாதா வென்றும்
விக்கினங்கள் தீர்த்தருளு நாதா வென்றும்
மேதையர்கள் துதிகொல்லங் கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீ ரூஞ்சல். 8

கரிமுகனைக் கொன்றமரர் கணத்தைக் காத்தாய்
காகுத்தன் கொலைப்பழியைக் கணத்திற் றீர்த்தாய்
திரிபுரத்தை யெரிக்கவரு தேரைப் பேர்த்தாய்
தினைக்குறவர் மலர்க்கொடியைச் சேய்க்குச் சேர்த் [தாய்
புரிநெகிழா விருவினையும் போகப் பார்த்தாய்
புனல்கவிழ்த்துப் புருகூதர்க் கருணை கூர்த்தாய்
விரிமலர்ப்பூம் பொழிற்கொல்லங் கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீ ரூஞ்சல். 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரதகர வபயகுட வகட கும்ப
 மதவறுகு முகசுமுக வரவே ரம்ப
பரதநட கமலபத நிமல போத
 பரமசுக வமுதநித மருளு நாத
புரதகன னரியசுத விமல வேக
 பூரணபுண் ணியபுனித புராண யோக
விரததவ மலிகொல்லங் கலட்டி மேவும்
 வீரகத்தி விநாயகரே யாடூ ரூஞ்சல். 10

மதியமலி செஞ்சடையீ ராடூ ரூஞ்சல்
 வஞ்சமலி நெஞ்சடையீ ராடூ ரூஞ்சல்
துதிமலிபோ தகமுவந்தீ ராடூ ரூஞ்சல்
 சுவைமலிமோ தகமுவந்தீ ராடூ ரூஞ்சல்
கதிமலியும் சலமுடித்தீ ராடூ ரூஞ்சல்
 கறைமலிசஞ் சலமுடித்தீ ராடூ ரூஞ்சல்
விதியடியர் துதிகொல்லஞ் கலட்டி மேவும்
 வீரகத்தி விநாயகரே யாடூ ரூஞ்சல். 11

## வாழி

ஆவாழி யருள்வாழி யறங்கள் வாழி
 அருந்தமிழும் பழமறையா கமமும் வாழி
பூவாழி பொன்னின்மழை பொலிந்து வாழி
 பூதிகண்டி யைந்தெழுத்தும் பொலிந்து வாழி
தேவாழி மாவைநகர்ச் செவ்வேள் வாழி
 செந்தமிழி னூஞ்சலிசை சிறந்து வாழி
மேவார்க்கு மருள்கொல்லங் கலட்டி மேவும்
 வீரகத்தி விநாயகரும் வாழி வாழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருச்செந்தூர்ப்புராணம்

## காப்பு

ஊற்றெ டுத்துவண் டோவிடு மும்மதத்
தாற்றொ ழுக்கி னருவிபஞ் சாரல்வாய்
ஏற்று கைக்கும் இறைவற்கு முந்திய
மாற்றி லாக்களி யானையை வாழ்த்துவாம்.

(இ - ள்) வண்டு ஒலிவிடும் மும்மதத்து அருவி - வண்டுகள் சத்திக்கின்ற மும்மதமாகிய அருவி; ஊற்றெடுத்து - பெருக்கெடுத்து; ஆற்றொழுக்கின் அம்சாரல் வாய் - ஆற்றொழுக்குச் செய்கின்ற அழகிய மலைச் சாரலின்கண்; ஏறு உகைக்கும் இறைவற்கு - ஏற்றை உகைக்கின்ற இறைவனுக்கு; முந்திய - முதற்கட் டோன்றிய; மாற்றிலாக்களியானையை - ஒப்பில்லாத மும்மதக் களிப்பினையுடைய யானைமுகக் கடவுளை; வாழ்த்துவாம் - வாழ்த்துதலாகிய வணக்கத்தைச் செய்வாம். (எ - று)

மும்மதம் - அறிவு இச்சை செயல்களாகிய மும் மதம். மதம் என்றதற்கேற்ப வண்டோவிடும் என்றார். 'தூம்புடை நெடுங்கை வேழம் தூற்றியவெள்ளிலபோல'. (சிந்தாமணி) என்புழிப்போல. வேழம் - ஒருநோய். சிருட்டிக்கப்பட்ட ஆன்மாக்கள் எனினுமாம். அவை ஒலிடுதலாவது தனுகரணங்கள் பெற்றுச் சஞ்சரித் தலாம். மும்மத அருவி சிருட்டி ஆரம்பந்தோறும் ஊற்றெடுப்பதென்க.

மும்மதத்து அருவி ஊற்றெடுத்து (ஒழுகும்) ஆற் றொழுக்கின் அம்சாரல் என்க. ஒழுகும் என்பதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவித்து முடிக்க: ஒழுக்கின் என்பதன் முதனிலை யோடு முடிப்பினும் அமையும். எடுக்க என்பதன் திரிபெனக்கொண்டு ஊற்றெடுத்தலால் ஒலிடும் என்றுமாம்.

சாரல் கயிலைமலைச்சாரல் என்க. வாய் ஏழனுருபு.

கயிலைச்சாரலில் மும்மத அருவி சிருட்டிதோறும் ஊற்றெடுத்து ஆற்றொழுக்குச் செய்யுமென்க. ஆற் றொழுக்குச் செய்தலாவது ஆன்மாக்களின் அறிவு இச்சை செயல்கள் விருத்தியுற்று நெறிப்படச் செய் தலாம்.

'ஊற்றெடுத்தலால் வண்டுகள் சத்திக்கின்ற மும் மதமாகிய ஆற்றொழுக்குச் செய்கின்ற அருவியினை யுடைய அழகிய சாரலின் கண்' எனக்கொண்டு கூட்டுக.

ஏறு - இடபம். ஈண்டு - பசு என்றது ஆன்மாக்களை. 'பசுவேறு மெங்கள் பரமன்' தேவாரம் (கோளறு பதிகம்) என்பது காண்க. ஈண்டு உகைத்தலாவது ஆன்மாக்களுக்குத் தனுகரணதிகளைக் கொடுத்து பிறவிக்கட் செலுத்தலாம். அனைத்துக்கும் அவனே முதலாதலின் இறைவன் என்றார். எங்கும் இறுத்தலின் இறைவன் எனினுமாம். எல்லா முதன்மையும் உடையன் என்றவாறு.

முந்துதல் சிருட்டிதோறும் முதற்கட் டோன்றுதல். சத்தமும் அர்த்தமுமான பிரபஞ்சத்து மூலமான முதலெழுத்தை, சிவத்தின் தூண்டுதலால் சத்தி நோக்கிய வழி மூல எழுத்து களிறும் பிடியுமாய் ஆனைமுகக் கடவுளின் வடிவத்தைத் தோற்றுவித்தல் கந்தபுராணத்தில் கயமுகனுற்பத்திப்படலத்திற் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறு - ஒப்பு. சிருட்டியின் தோற்றத்துக்கு ஒப்பின்மை. ஏறு மாறு என்பன எதுகை நோக்கி ஏற்று மாற்று என நின்றது.

களி - களிப்பு. மும்மதக் களிப்பு எனப் பதவுரையிற் கூறப்பட்டது.

ஆன்மாக்களை நெறிப்படுத்தும் மும்மதம் களியானைக்கு உரித்தாதலன்றி அதன் தோற்றத்துக்குங் காரணமாயமைதலின் சிருட்டிக்கு இடமான கயிலைச் சாரலில் வைத்து மும்மதத்தருவியஞ்சாரல் என்றார். வெறும் அருவியும் சாரல் போலாகாமை அம் என்பதனால் உணர்த்தப்பட்டது.

களியானையை வாழ்த்துதலாவது நம் அறிவிச்சை செயல்களை, அவற்றை விருத்திசெய்யும் களியானையின் அறிவிச்சை செயல்களின் வழிநடத்துதலாம். இதனையே நற்குஞ்சரக்கன்றை நண்ணுதல் என்பர். ஓங்கார மூர்த்திக்கு ஒம்பட்டு நிற்றல் என்றவாறு.

நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானம்
கற்குஞ் சரக்கன்று காண்.

(திருவருட்பயன்)

---

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

(சம்பந்தர் தேவாரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org